<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 374/2022**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>
<u>வாக்குமூலம் – பி.வா.சா. 2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அப்துல்மஜீத் | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 19.02.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு பிப்ரவரி 19ம் நாள் சாட்சியம்.

---

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கரையூர் பள்ளிவாசலில் தலைவராக இருக்கிறேன். நான் அதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே எங்கள் பள்ளிவாசல் ஜமாத்தில் வைத்து பைசல் பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஷரியத் சட்டப்படி இஸ்லாமிய கோட்பாட்டை நான் கடைபிடிக்கிறேன். எங்கள் ஜமாத்திற்கு கட்டுப்பட்ட முஸ்லீம் மக்களிடையே ஏற்படுகின்ற பிரச்சனைகளை முத்தவல்லி ஆகிய என்னால் ஜமாத்தில் வைத்து பேசப்படும் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் எனக்கு வரவில்லை. மீனாட்சி அழைத்ததின் பேரில் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிடையாது.

3. நான் முதல் விசாரணையில் தாக்கல் செய்துள்ள பிரமாணபத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நிரூபிப்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியோடு கூட்டு சேர்ந்து கொண்டு 2,3 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சொத்தில் வாதிகளிடம் 1ம் பிரதிவாதி வாடகைதாரராக இருப்பதை மறைத்து 2,3 பிரதிவாதிகள் பல்கீஜ் என்பவரிடம் அடமானத்திற்கு சொத்தில் குடியிருப்பதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பல்கீஜ் என்பவர் பெயரில் உள்ள போக்கிய உடன்படிக்கையோ, பல்கீஜ் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான பட்டாவோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.